மே 14, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய்: எப்போதும் நீ ஆண் அல்லது பெண் அல்ல, ஆனால் ஆத்மா ஆவாய். நீ உன்னுடைய மூத்த தந்தை (சிவ்பாபா) இடமிருந்து உன்னுடைய ஆஸ்தியை, இளைய தந்தை (பிரம்மா) மூலம் பெற்றுக் கொண்டிருக்கின்றாய் என்னும் விழிப்புணர்வில் இருக்கவேண்டும். இந்த விழிப்புணர்வு, உன்னுடைய விழிப்புணர்வில் இருக்கும் இராவணின் அசுர விஷயங்களை நீக்குகின்றது. வெறுமனே நீங்கள் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள் என்ற விழிப்புணர்வை நீ வைத்திருக்கும்போது, அசுர விஷயங்கள் உன்னுடைய விழிப்புணர்விலிருந்து முடிந்துவிடும். இது தூய்மையாக இருப்பதற்கு ஒரு மிக நல்ல வழி ஆகும். எவ்வாறாயினும், இதற்கு அதிகமான முயற்சி தேவைப்படுகின்றது.

இனிமையான பாபா, நாள் பொழுதில் இந்த விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்து கொள்கின்றேன்: நான் ஸ்ரீமத்தை பின்பற்றுவதன் மூலம் எனக்கு நானே சுய-இராஜ்ஜிய திலகத்தைக் கொடுத்துக் கொள்வதற்குத் தகுதிவாய்ந்தவனாக ஆகிக்கொண்டிருக்கின்றேன். ஓர் ஆத்மாவாக நான் அனைத்து நற்குணங்களாலும் முற்றிலுமாக நிறைந்திருக்கின்றேன் என்பதை நான் புரிந்துக்கொள்கின்றேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: இவர் (பிரம்மா) ஓர் முயற்சி செய்யும் மாணவர். நீங்களும் கூட மாணவர்கள். இவரும் படிக்கின்றார்; இவரும் கூடத் தந்தையின் நினைவில் இருக்கின்றார். லட்சுமி நாராயணரின் படத்தைப் பார்க்கும்போது அதிகம் சந்தோஷம் இருக்கின்றது, ஏனென்றால், அவர் அவ்வாறு ஆகப்போகின்றார். நீங்கள் கூட, ஸ்வர்கத்தின் இளவரசர்கள் இளவரசிகள் ஆக வேண்டும். இது இராஜ யோகம் ஆகும். இது உங்கள் இலக்கும் குறிக்கோளும் ஆகும்.

நான் கற்கும் மனோபாவத்தைக் கொண்டிருப்பதில் உறுதியாக இருக்கின்றேன். மேலும் என்னுடைய நடத்தை இராஜ ரீகமாக இருப்பதற்கு தெய்வீகத்தன்மையைக் கருத்தாய்வு செய்யவும் உறுதியாக இருக்கிறேன். கற்கும் மனோபாவமானது அனாதியான உண்மைகள் வெளிப்படும் இடத்தை என்னை ஆராய வைக்கின்றது.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: உலகில் கார் இருள் இருக்கின்றது. அளவு கடந்த நிலையில் பொய் இருக்கின்றது. உலகை யார் மீண்டும் சத்திய பூமி ஆக்குவார்கள்? இதை நீங்கள்
மட்டுமே அறிவீர்கள். மேலும், அந்த ஒருவரை உங்களால் ஆத்மாவின் கண் கொண்டு பார்க்க முடியும்.

நான் ஆத்மாவின் கண்கொண்டு இருட்டையும் பொய்யையும் நீக்க உறுதியாக இருக்கிறேன். நான் நற்குணத்திற்கும் விகாரத்திற்கும் இடையே பாகுபாடு செய்வேன்; மேலும் மாயையின் மாறுபட்ட வண்ணங்களையும் அறிந்து கொள்வேன்.

**ஒரு அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.

குறிப்பு 1: சாய்வு வார்த்தைகள் அந்தநாள் முரளியிலிருந்து தொகுக்கப்பட்டவை.

குறிப்பு 2: இந்த வண்ணத்தில் இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் மாறாமல் இருக்கும்.